ශ්‍රී ලංකා ජාතික ක්‍රිස්තියානි මණ්ඩලය
இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்
National Christian Council of Sri Lanka

# அரசியலமைப்பின் 20வது திருத்தம் தொடர்பான இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் அறிக்கை

அரசியலமைப்பிற்கான 20வது திருத்தமானது அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னெடுக்கின்ற முறையைக் குறித்தும், திருத்தத்தின் பல்வேறு தனித்துவமான சட்டவிதிகளைக் குறித்தும் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றமானது கவனம் செலுத்துகின்றது.

**செயல்முறை**

நாடாளுமன்றத்தில் குழுக்கூட்ட செயல்முறையின்போது சட்டத்தில் ஏற்படுத்தப்படவுள்ள மாற்றங்களை அறிவிக்கும் அதேவேளை அரசியலமைப்பின் 20வது திருத்தச் சட்ட முன்வரைவினை நடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் தீர்மானித்துள்ளது. என்ன மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை அரசாங்கம் அறிவிக்கவில்லை. அரசியலமைப்பானது சட்டவாக்கங்களுக்கான நீதித்துறை மேலாய்விற்காக மிகக் குறுகிய கால அவகாசத்தையே வழங்கியுள்ளது. சட்ட அமுலாக்கத்திற்குப் பின்னரான நீதித்துறை மேலாய்வைத் தடை செய்வதாலும், குழுக்கூட்ட திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னர் பொதுமக்கள் மற்றும் நீதித்துறை சார்ந்த கண்காணிப்பிற்கு விலக்கப்பட்டிருக்கும். இது வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், மற்றும் சட்டப்படி அமைந்துள்ள அரசாங்கக் கொள்கைகளுக்கான அடிப்படை அம்சங்களை மீறுகின்ற ஒரு செயலாக அமைவதோடு, அரசியலமைப்பு திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் அதைக் குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களுடன் கலந்தோலோசிக்கப்படும் என்ற பல்வேறு அரசாங்க அமைச்சர்களால் செய்யப்பட்ட வாக்குறுதியை மீறுகின்ற செயற்பாடாகும்.

**விடயம்**

அரசியலமைப்பின் 20வது திருத்தச் சட்டத்தின் மூலமாக 19வது திருத்தத்தின் பல அம்சங்களை நீக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 19வது திருத்தத்தின் அனைத்து அம்சங்களும் தவறானவையாக இல்லை. அதிலுள்ள சாதகமான அம்சங்கள் தக்க வைக்கப்பட வேண்டும்.

20வது திருத்தமானது, ஜனாதிபதியின் நியமனத்திற்கான பரந்த அதிகாரங்களைச் சுருக்குவதன் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் அலுவலகம் தொடர்பான அமைப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கு, பரந்த அரசியல் ரீதியான சக்திகள் மற்றும் தனி உரிமைகளுக்கான சமூக குழுக்களினால் வழிநடத்தப்பட்டு, 1978இல் அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து குறிப்பாக இளைஞர் அமைதியின்மைக்கான ஜனாதிபதி ஆணையத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட பிரச்சாரத்தினாலும் பிரதான ஜனநாயக நிறுவனங்களை அரசாங்க செயல்பாடு/செல்வாக்கிலிருந்து நீக்குவதற்கான முக்கியத்துவத்திற்கு ஆதரவாக 1980களின் நடுப்பகுதியில் செய்யப்பட்ட பரிந்துரைகளையும் புறக்கணிக்கிறது.

20வது அரசியலமைப்பு திருத்தத்தின் பின்வரும் அம்சங்களை மீளாய்வு செய்யும்படி அரசாங்கத்திடம் நாங்கள் வலியுறுத்துகிறோம்:

1. அரசியலமைப்பு ஆலோசனை சபையை மாற்றீடு செய்வதற்கு பெலவீனமானதொரு நாடாளுமன்ற ஆலோசனை சபையை அறிமுகப்படுத்துவது பின்னோக்கிய ஓர் அடியாகும். ஆலோசனை சபையின் அவதானங்களை நாடுவதற்கு மட்டுமே ஜனாதிபதி கோரப்பட்டுள்ளார். இதன் விளைவாக உயர் நீதிமன்றங்களுக்கும்

அனைத்து சுயாதீன ஆணையங்களுக்கும் நபர்களை நியமிப்பதற்கான தனித்த சுயேட்சையை ஜனாதிபதிக்கு அளிக்கிறது. இது அவர்களுடைய சுயாதீன தன்மையைக் குறைத்து மதிப்பிடும். தேர்தல்கள் மற்றும் மனித உரிமைகளுக்குப் பொறுப்பான நீதிமன்றம் மற்றும் ஆணையங்களின் சுயாதீனமானது சட்ட ஆட்சி மற்றும் ஜனநாயக அத்தோடு பொறுப்பு வாய்ந்த ஆட்சிக்கான அத்தியாவசியமான முன்நிபந்தனையாகும்.

2. 19வது திருத்தமானது ஊழல், அரசியல் ரீதியான ஆதரவு மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தைக் குறைப்பதை உறுதிப்படுத்துவதற்கு தணிக்கை ஆணையத்தையும், தேசிய கொள்முதல் ஆணையத்தையும் நிறுவியது. ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அலுவலகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிகள் வேறு எந்த அமைச்சுக்களையும் துறைகளையும் போல தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு இடம் கொடுத்தது. இந்த அம்சங்கள் 20ம் திருத்தத்தினால் நீக்கப்படுவது எவ்வித நியாயப்படுத்தலையும் கொண்டிருக்கவில்லை.

3. ஜனாதிபதி தனக்குத் தானே அமைச்சர் பதவிகளை நியமிப்பதற்கும் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு ஒரு வருடத்திற்குப் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கும் அதிகாரமளிக்கிற வழங்கலுக்கான மீள்-அறிமுகமானது கொள்கைகளை நிறைவேற்றுபவரைக் கண்காணிக்கிற குழுவாக செயற்படுவதை எதிர்பார்க்கும் சட்டமன்றத்தின் வல்லமைகளைப் பலவீனமடையச் செய்கிறது.

4. தசாப்தங்களாக அடுத்தடுத்து வரும் அரசாங்கங்களினால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகி இருந்துள்ள “அவசர சட்டவாக்கங்களை” அறிமுகப்படுத்துவதற்கான சட்டமன்றத்திற்கு அதிகாரமளிக்கிற வழங்கல்களுக்கான மீள்-அறிமுகமானது, சட்டப்படி அமைந்துள்ள அரசாங்க கொள்கைகள், பொறுப்புக் கூறல் மற்றும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான அடிப்படை விதிமுறைகளை குறைத்து மதிப்பிடுகிறது.

**முடிவு**

முக்கிய நிறுவனங்கள் மற்றும் பொறுப்பு வாய்ந்த ஆட்சிக்கான சுயாதீனத்தை ஊக்குவிக்கும் 19வது திருத்தத்தின் குறிப்பிட்ட பகுதிகளைப் பாதுகாக்கும்படி நாங்கள் அரசாங்கத்திடம் வேண்டுகிறோம். அரசியலமைப்பின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாக அரசாங்கத்தை விட மக்களைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் இருப்பதால், அரசியலமைப்பின் 20வது திருத்தம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதற்கு முன்னர் அதைக்குறித்து பொதுமக்களின் கருத்துக்களை கருத்திற்கொள்ளும் வகையில் அதிலுள்ள அனைத்து திருத்தங்களும் பொதுமக்கள் அறிந்துகொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நாம் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.

***“மாறாக, அன்பின் அடிப்படையில் உண்மை பேசி, தலையாகிய கிறிஸ்துவைப் போன்று எல்லாவற்றிலும் நாம் வளர வேண்டும். (எபேசியர் 4:15)***

01.10.2020

**கையொப்பமிட்டோர்:**

**அங்கத்துவ திருச்சபைகள்**

- அருட்திரு.டபிள்யு.பி.எபனேசர் ஜோசப், தலைவர்- இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் மற்றும் இலங்கை மெதடிஸ்த திருச்சபை.
- பேராயர் அதிவண. கீர்த்திசிறி பெர்னான்டோ, இலங்கைத் திருச்சபை, குருநாகலை மறைமாவட்டம்.
- பேராயர் அதிவண. அறிவர். டேனியல். எஸ். தியாகராஜா- யாழ் மறைமாவட்ட பேராயர், தென்னிந்திய திருச்சபை
- அதிவண.டிலோராஜ் ஆர்.கனகசபை- உயர் மறைமாவட்ட பேராயரின் நிறைவேற்றதிகாரி மற்றும் மறைமாவட்ட முதன்மை அருட்பணியாளர், இலங்கைத் திருச்சபை, கொழும்பு மறைமாவட்டம்.
- அருட்திரு. ஹேஷான் டி சில்வா- தலைவர்- இலங்கை பெப்டிஸ்ட் சங்கம்
- அருட்திரு.சமன் பெரேரா- தலைவர், இலங்கை பிரஸ்பட்டேரியன் திருச்சபை
- அருட்திரு. சர்லி பேபர்- தலைவர், கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை
- ஆணையாளர் சுரேஷ் பவர் - பிராந்திய தளபதி, இரட்சண்ய சேனை
- அருட்திரு. அறிவர்.கிறிஸ்சோ ஹென்டி- தலைவர், மக்கள் தேவ சபை
- அருட்திரு.எஸ். ஜோர்ஜ் நிரஞ்சன்- தலைவர் (மாற்றாள்)- இலங்கை நாற்சதுர சுவிசேஷ திருச்சபை
- அருட்திரு. மெக்ஸ்வெல் டொஸ் - பொதுச் செயலாளர், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்

**அங்கத்துவ ஒருமைப்பாட்டு அமைப்புக்கள்:**

- இளம் ஆடவர் கிறிஸ்தவ அமைப்பு (YMCA)
- இளம் பெண்கள் கிறிஸ்தவ அமைப்பு (YWCA)
- இலங்கை இறையியல் கல்லூரி
- இலங்கை வேதாகம சங்கம்
- கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம் (SCM)
- கிறிஸ்தவ இலக்கிய சங்கம்
- சத்திய வசனம்

**உப அங்கத்துவ திருச்சபைகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைப்புக்கள்**

- அருட்திரு. ஜி. நடராஜா- தலைவர், இலங்கை லூத்தரன் திருச்சபை
- அருட்திரு.தே. தேவநேசன்- தலைவர், அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை
- கிறிஸ்துவுக்கான இளைஞர் அமைப்பு
- கொழும்பு இறையியல் கல்லூரி

#368/6, Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka.
Telephone: +94 (11) 2671723 Fax: +94 (11) 2671721
E-Mail: info@nccsl.org | Website: www.nccsl.org